**வர்த்தகம், வாணிபம், உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு**

# வரையறுக்கப்பட்ட தேசிய விவசாய சந்தை சேவைகள் நிறுவனம்
# (National Agri Market Services Limited)

## விசேட பொருளாதார நிலையக் கட்டிடத்தொகுதி,

### இல. 44, கிரிமண்டல மாவத்தை நாரஹேன்பிட்டி கொழும்பு-05
### விவசாய சந்தைகளுக்கான ஒரு தேசிய நிறுவனத்தைக் கட்டியெழுப்புதல்

வரையறுக்கப்பட்ட தேசிய விவசாய சந்தை சேவைகள் நிறுவனம் (NAMS) என்பது இலங்கை முழுவதிலும் உள்ள 18 விசேடப் பொருளாதார நிலையங்களின் (DECs) நிர்வாகம் மற்றும் அபிவிருத்தியை மறுசீரமைக்கும் தேசிய பொறுப்பைக் கொண்ட புதிதாக நிறுவப்பட்ட 100% அரசாங்கத்திற்குச் சொந்தமான நிறுவனமாகும்.

திறன், வெளிப்படைத்தன்மை மற்றும் பொது மதிப்பைப் வலுப்படுத்தும் அதே வேளையில், விவசாயிகள், வர்த்தகர்கள் மற்றும் நுகர்வோருக்குச் சிறந்த சேவையை வழங்கும் நவீன, துடிப்பான மற்றும் தொழில்முறை ரீதியாக நிர்வகிக்கப்படும் வர்த்தகச் சூழலை உருவாக்குவதன் மூலம், இந்த நிலையங்களை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்வதற்காக வரையறுக்கப்பட்ட தேசிய விவசாய சந்தை சேவைகள் நிறுவனம் நிறுவப்படுகிறது.

வரையறுக்கப்பட்ட தேசிய விவசாய சந்தை சேவைகள் நிறுவனம் தனது நிறுவனத்தைக் கட்டியெழுப்புவதற்கும், எதிர்காலத்திற்காக வலுவான அமைப்புகளை உருவாக்குவதற்குமான முக்கிய கட்டத்தில் அடியெடுத்து வைக்கும் இந்த வேளையில், பின்வரும் பதவிக்கு தகுதியும் அனுபவமும் கொண்ட தொழில்முறை வல்லுநரிடமிருந்து விண்ணப்பங்களை அழைக்கிறது:

## பிரதான நிறைவேற்று அதிகாரி (CHIEF EXECUTIVE OFFICER)

பிரதான நிறைவேற்று அதிகாரி (CEO), NAMS நிறுவனத்திற்கு ஒட்டுமொத்த நிர்வாகம் மற்றும் நிறுவன தலைமையையும் வழங்குவார். திறம்படச் செயல்படும் முறைமைகளை நிறுவுதல், செயல்பாட்டு ஒழுக்கத்தை வலுப்படுத்துதல், பணிப்பாளர் சபையின் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துதல், அரசாங்க நிறுவனங்கள் மற்றும் பங்குதாரர்களுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல் மற்றும் நாடு தழுவிய அளவில் நிறுவனத்தின் பணியாளர்கள் மற்றும் செயல்பாடுகளை வழிநடத்துதல் ஆகியவற்றுக்கு இவர் பொறுப்பாவார்.

ஒரு புதிய நிறுவனத்தைக் கட்டியெழுப்பக்கூடிய, தீர்மானங்களைச் செயல்பாடுகளாக மாற்றக்கூடிய, மற்றும் தொழில்முறை, அர்ப்பணிப்பு மற்றும் வலுவான தேசியப் பொறுப்புணர்வுடன் வழிநடத்தக்கூடிய அனுபவம் வாய்ந்த ஒரு நிர்வாகத் தலைவரே இதற்குப் பொருத்தமான விண்ணப்பதாரர் ஆவார்.

## தகைமைகள் மற்றும் அனுபவம்

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட விவசாயம் / முகாமைத்துவம் / வியாபார நிர்வாகம் / விஞ்ஞானம் மற்றும் சந்தைப்படுத்தல் அல்லது அது தொடர்பான ஏதேனும் ஒரு துறையில் இளமாணிப் பட்டம் மற்றும் தொடர்புடைய துறையில் ஒரு முதுமாணிப் பட்டம் (Postgraduate Degree) அல்லது நிர்வாகத் துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை சான்றளிக்கப்பட்ட நிறுவனத்தின் இணை அங்கத்தவர்.

   **அனுபவம்:**

   ஆரம்பப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் ஒரு கூட்டுத்தாபனம், சபை அல்லது புகழ்பெற்ற வர்த்தக நிறுவனத்தில் நிரூபிக்கப்பட்ட சாதனைப் பதிவோடு, முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தபட்சம் பதினேழு (17) வருடங்கள் அனுபவம் இருக்க வேண்டும். இதில் ஐந்து (05) வருடங்கள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் பெற்ற அனுபவமாக இருக்க வேண்டும்.

2. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விவசாயம், முகாமைத்துவம், வியாபார நிர்வாகம், விஞ்ஞானம் மற்றும் சந்தைப்படுத்தல் அல்லது அது தொடர்பான ஏதேனும் ஒரு துறையில் இளமாணிப் பட்டம். மற்றும் தொடர்புடைய துறையில் கலாநிதிப் பட்டம் (PhD).

**அனுபவம்:**

கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் ஒரு கூட்டுத்தாபனம், சபை அல்லது புகழ்பெற்ற வர்த்தக நிறுவனத்தில் நிரூபிக்கப்பட்ட சாதனைப் பதிவு மற்றும் நிர்வாக அனுபவத்துடன், சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடங்கள் அனுபவம் இருக்க வேண்டும்.

**ஏனை நிதிச் சலுகைகள்**

50,000.00 போக்குவரத்து கொடுப்பனவு, 145 லீட்டர் எரிபொருள் கொடுப்பனவு, 17,800.00 ரூபா வாழ்க்கைச் செலவுப்படி, 25,000.00 ரூபா தொழில்சார் கொடுப்பனவுகள் மற்றும் 02/2022ஆம் இலக்க PED சுற்றுநிருபத்தின் பிரகாரம் தொடர்பாடல் கொடுப்பனவுகள்

**சம்பள அளவுத்திட்டம்**

MSD சுற்றறிக்கை இல. 01/2025 HM 2-1 - 2025 ரூபா [161,140 - 12 x 4,850 – 219,340]

**விண்ணப்பிக்கும் நடைமுறை**

கல்வி மற்றும் தொழில்முறை தகுதிகள் மற்றும் அனுபவச் சான்றிதழ்களின் பிரதிகளுடன் கூடிய முழுமையான சுயவிரக் குறிப்பு மற்றும் உறவினரல்லாத இரு நடுவர்களின் பெயர்கள் மற்றும் தொடர்பு விவரங்களுடன், 2026 ஒக்டோபர் 25ஆம் திகதிக்கு முன்னதாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு விண்ணப்பிக்கவும். கடித உறையின் மேல் இடது மூலையில் நீங்கள் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடவும்.

**தலைவர்,**
**வரையறுக்கப்பட்ட தேசிய விவசாய சந்தை சேவைகள் நிறுவனம்,**
**விசேட பொருளாதார நிலையக் கட்டிடத்தொகுதி,**
**இல. 44, கிரிமண்டல மாவத்தை, கொழும்பு 05.**
**தொலைபேசி : 011 2506 939 - தலைவர்**
**மின்னஞ்சல் : namslpb@gmail.com**

Gazette.lk AMBITIONS REALIZED